குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை அமுல்படுத்துவதில் தமிழகம் வகிக்கும் இடம்.

*வினா எண். 55—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை அமுல்படுத்துவதில் தமிழகம் இந்தியாவில் எத்தனையாவது இடத்தை வகிக்கிறது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: குடும்பநலத் திட்டத் துவக்கக் காலம் (1956 வருடம்) முதல், 1981 ஆம் ஆண்டு நவம்பர் வரையில், குடும்பநலத் திட்டத்தின்கீழ், அறுவைச் சிகிச்சை அனுசரிப்பவரின் விகிதத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது.

வயது முதிர்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்.

*வினா எண். 59— திரு. கு. ரமணி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வயது முதிர்ந்து செயல்பட முடியாமல் போகிற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளதை நடைமுறையாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

(ஆ) அந்த ஓய்வூதியம் பெற என்னென்ன தகுதிகள் தேவை?

(இ) இப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளர்களின் பெயர்களை கிராமங்களில் பதிவு செய்ய என்ன ஏற்பாடுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) வயது முதிர்ந்து செயல்பட முடியாமல் போகிற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளதை நடைமுறையாக்கும் வகையில், 1981–82-ம் ஆண்டில் முப்பதாயிரம் நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க 98·46 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

(ஆ) இந்த அரசு ஓய்வூதியம் பெறும் நபர்கள், 60 வயதுக்கு குறையாதவர்களாகவும் விவசாயத் தொழிலாளர்களாகவும் வேறு வேலை ஏதும் செய்ய முடியாதவர்களாகவும், தம்மை காப்பாற்ற எவரும் இல்லாதவர்களாகவும், ஆதரவற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

1983 ஜனவரி 29]

(இ) இத்திட்டம் எல்லாக் கிராமங்களிலும் நன்கு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. தகுதி உள்ள நபர்கள் தங்களுடைய விண்ணப்பத்தை வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கிராமங்களில் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட, ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்தத் திட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவேகூட முடியாமல் இருக்கிறது. அவர்கள் படிப்பு அற்றவர்கள். ஆகவே, இதைப்பற்றி அவர்களுக்குத் தெரிய வைக்கும் வகையில் ஒவ்வொரு பஞ்சாயத்து வாரியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்ன முறையில் விளம்பரப்படுத்தித் தெரியப்படுத்தப்பட்டுள்ளது? அந்த வகையில் எவ்வளவு விவசாயக் கூலித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று அறிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே பதிலில் கூறியிருக்கிறேன். விளம்பரம் செய்யப்பட்டு அதன் மூலமாக வட்டாட்சியர் அலுவலகத்தில் முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான மனுக்கள் கொடுக்கப்படுகின்றன. அதை வாங்கி நல்லமுறையில், தகுதி உள்ளவர்கள் அதை நிரப்பி பிறகு வட்டாட்சியருக்கு அனுப்பினால் அவர்கள் ஓய்வூதியம் பெறுவார்கள்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, வட்டாட்சியர் அலுவலகம் என்று நமது அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு அந்த அலுவலகங்கள் எங்கு இருக்கின்றன என்று தேடிப் போய்த் தங்கள் பெயர்களைப் பதிவு செய்வது என்பது சாதாரண நடைமுறையில் மிகவும் கஷ்டமான காரியம். எனவே, அதற்குப் பதிலாக அவர்கள் இருக்கின்ற ஒவ்வொரு பஞ்சாயத்துக் காரியாலத்திலேயும் அதற்கென்று தனி இடம் ஏற்படுத்தி அங்கே அவர்கள் வந்து நிரந்தரமாகத் தாங்கள் வேலையற்றவர்கள் என்றும், குறிப்பிட்ட தகுதி உடையவர்கள் என்றும் இருப்பவர்கள் வந்து பதிவு செய்கின்ற நடைமுறையை அரசு கொண்டு வருமா? இதுவரையில் அப்படித் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாயத்துவாரியாக அவர்களுக்கு இது வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர்கள் ஒவ்வொரு வட்டாட்சியருக்கும்தான் மனுக்கொடுத்து அதன் மூலம் உதவித் தொகை பெற்று வருகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. மொத்தம் உதவித் தொகை பெறுகின்றவர்கள் 1,99,158 பேர்கள். அவர்களில் ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் 30,000 நபர்கள் உதவித் தொகை பெறுகிறார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு தாசில்தாருக்கு மனு கொடுக்கப்பட்டு, டாக்டர் சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்கப்பட்டு, அனாதை என்று சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுக்கப்பட்டு இருந்தும் இன்னும் பல்லாயிரக் கணக்கான நபர்கள் இந்த உதவித் தொகையைப் பெறாமல் இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டால் வேகன்சி இல்லை, யாராவது இறந்தால்தான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் பரிசீலனை செய்து எத்தனை மனுக்கள் இருக்கின்றனவோ அத்தனை பேர் களுக்கும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒருவர் இறந்த பிறகு அவருடைய இடத்தை நிரப்ப மற்றொரு தகுதி வாய்ந்த முதியோருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது. அது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் இப்பொழுது நாங்கள் — இந்த அரசு பதவியேற்றதற்குப் பிறகு அப்படியுள்ள அந்த முறையைக் கடைப்பிடிக்காமல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற முறையை வரையறுத்து அதன் மூலமாக நாங்கள் முதியோர் உதவித்தொகை கொடுத்து வருகிறோம்.

(முற்பகல் 10-10)

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, மாண்புமிகு அமைச்சர் சொல்வதைப்போல இல்லாமல் இறந்தவர்களால் ஏற்படுகின்ற காலியிடத்திற்கு மட்டும் புதிய வர்கள் பெறுகின்ற பழக்கம் நடைமுறையில் இருந்து வருவதாக ரெவின்யு அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். இதைப்பற்றி மீண்டும் இலாகாவிலே விசாரித்து நல்ல பதிலைக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட முறையை அரசு கையாளவில்லை. ஒரு வருடத் திற்கு 30 ஆயிரம் பேர்கள், 20 ஆயிரம் பேர்கள் என்று வரை யறுத்து அதன் மூலம் கொடுத்து வருகின்றோம். இந்த 1982 ஆம் ஆண்டுக்கு 10 ஆயிரம் பேர்களுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு, முதியோர்களுக்கு 30 ஆயிரம் பேர்களுக்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம், இன்றைக்கும் தாசில்தார் அவர்கள் கொடுக் கின்றபோது, கோட்டா அடிப்படையில்தான் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். நான் சொல்ல விரும்புவது 60 வயது

முடிந்த எல்லா விவசாயத் தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டும். வருடத்திற்கு 4 மாதங்கள்தான் அவர்களுக்கு வேலை இருக்கும், மற்ற நாட்களில் அவர்களுக்கு வேலை இல்லை. எனவே 60 வயது முடிந்த அனைவரும் பென்ஷன் வாங்கத் தகுதி பெற்றவர்கள் என்று கருதி, அனைவருக்கும் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைவருக்கும் உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்றால், நம்முடைய நிதி நிலையையும் பார்க்க வேண்டும். ஒவ்வொரு முதியோருக்கும் ஆண்டுக்கு 860.50 ரூபாய் கொடுக்கிறோம். நபர் ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு உதவித் தொகை ரூ. 420.00, ஆண்டுக்கு இரு முறை வேட்டி, புடவை ரூ. 60.00; வாரம் அரை கிலோ அரிசி ரூ. 52.00; ரூ. 0.90 பைசா வீதம் மதிய உணவிற்காக ரூ. 328.50. எனவே அரசின் மூலமாக கிடைக்கும் உதவித் தொகை ரூ. 860.50. ஆகவே இந்த அடிப்படையை வைத்துக் கொண்டு நாம் நிதிநிலைமையை வரையறுத்து அதற்கேற்றவாறு கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியம் பெறுவதற்காகத் தகுதி பெற்றவர்களின் பட்டியலைச் சேகரிக்க அந்தந்த வட்டாரத்திலே உள்ள கிராம சேவக்குக்குத் தாக்கீது அனுப்பி, அவர்கள் மூலம் பட்டியலைத் தயாரித்து அரசுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு பரிசிலிக்கும்.

கால்நடைத் துறையிலுள்ள நோய்த்தடுப்பு புலனாய்வுப் பிரிவு

* வினா எண். 60—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் துறையில் நோய்த்தடுப்பு புலனாய்வு பிரிவு இயங்குகிறதா?

(ஆ) அவர்களுக்குப் பணி வரையறுக்கப்பட்டுள்ளதா?

(இ) நோய்த் தடுப்புப் பணியை வேறு யார் யார் கவனிக்கிறார்கள்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) நோய் வளர்ச்சி பற்றி அறிந்தவுடன் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனை கால்நடை உதவி மருத்துவர் அந்த கிராமத்திற்குச் சென்று நோய் தன்மை பற்றி அறிந்து நோயுற்ற